# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2018ஆம் ஆண்டு மே மாதம் 29 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 29.05.2018 | 1)தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் வீடுகள் தோறும் சேகரமாகும் கழிவு நீரினால் தொற்று நோய்கள் ஏற்படாவண்ணம், சுற்றுச்சூழலை பாதுகாத்திடவும், பொது மக்களின் சுகாதாரத்தை பேணி காக்கும் பொருட்டு பாதாள சாக்கடை திட்டப்பணிக்கு அமைக்கப்படவுள்ள 24 MLD கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்தல், ஒப்பந்தப்புள்ளி கோருதல் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகராக செயல்பட்டு கட்டுமான பணிகள் மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண்.10 நாள் 16.05.2017இன் படி தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்தின் (TWIC) மூலம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக அணையர், சென்னை அவர்களின் கடிதம் எண். 6184/2018/ UGSS 2 நாள் 19.03.2018 ல் அனுமதி அளித்துள்ளதை தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிட் மூலம் செயல்படுத்த 27.03.2018இல் ஸ்மார்ட் சிட்டி லிமிட் நிர்வாக கூட்டத்தில் தீர்மானம் எண்.02.06இல் ஒப்புதல் செய்துள்ளது.<br><br>அதன் பேரில் இவ்வலுவலக மாமன்றத்தீர்மானம் எண். 83 02.05.2018ஆம் தேதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு ரூ. 32.99 கோடி மதிப்பீடு மற்றும் அதனை 5 வருடங்களுக்கு இயக்கி பராமரிக்கும் பணிகளுக்கு ரூ 12.94 கோடி என மொத்த மதிப்பீடு தொகை ரூ. 45.93 கோடி செலவினத்தில் தூத்துக்குடி ஸ்மார்ட்சிட்டி லிமிட் மூலம் மேற்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் மேற்படி பணிகளை தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்த உத்திரவு வழங்கப்பட்ட தையும் மாமன்றம் பதிவு செய்துள்ளது.<br><br>இந்நிலையில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் மேற்கண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியினை செயல்படுத்துவது தொடர்பாக துணை மேலாளர், டுபிட்கோ, சென்னை அவர்களின் தலைமையில் 08.05.2018 அன்று நடைபெற்ற கூட்டத்தில் நகராட்சி விதிகளின்படி 90 எல்பிசிடி குடிநீர் விநியோகம் செய்யும் நகராட்சி பகுதியில் உள்ள மக்கள் தொகை | 93) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீட்டின்படி 24 MLD அளவு கொண்டதாக வடிவமைக் கப்பட்டுள்ளது. தற்போது தூத்துக்குடி மாநகராட்சியாக செயல்பட்டு வருவதால் 135 எல்பிசிடி குடிநீர் விநியோகம் செய்யும் மாநகராட்சி பகுதி மக்கள் தொகை கணக்கீட்டின் அடிப்படையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி வடிவமைக்க தெரிவிக்கப்பட்டு, அதன் பேரில் தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்தால் (TWIC) 28 எம்எல்டி அளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி வடிவமைத்து திருத்திய மதிப்பீட்டுத் தொகை ரூ.34.70 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்துள்ளது. மேலும் மேற்கண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை 5 வருடங்களுக்கு இயக்கி பராமரிக்க ஆகும் செலவினம் ரூ 11.63 கோடி என மதிப்பிட்டுள்ளது.<br>எனவே மேற்கண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கான மதிப்பீடு தொகை ரூ. 34.70 கோடி மற்றும் 5 வருட காலத்திற்கு இயக்கி பராமரிக்கும் செலவினத்தொகை ரூ. 11.63 கோடி செலவினத்தை தூத்துக்குடி ஸ்மார்ட்சிட்டி லிமிட் மூலம் மேற்கொள்ளவும், அதற்கான நிர்வாக அனுமதி பெறும் பிரேரணைகள் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள் கட்டமைப்பு நிதி வளர்ச்சி நிறுவனம் (டுபிட்கோ) சென்னை அவர்களுக்கு சமர்ப்பித்து உரிய நிர்வாக அனுமதிபெற மாமன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:** திருத்திய மதிப்பீட்டுத்தொகை மற்றும் உரிய பிரேரணைகள் சமர்ப்பிக்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/3209/2015 W (STP) | |

ஆணைய;ா (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி

நாள் 29.05.2018